

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்ட மன்ற தொகுதி கமுதூர் ஊராட்சி பெரியார் நினைவு சமத்துவபுரம் பகுதியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் புதிய கால் நடை நிலையத்தை தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரையூர், குரு ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 30.08.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு துவரை பருப்பு விதைகள் மற்றும் உளுந்து விதைகளை வழங்கினார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பயணத் திட்டத்தின்

# பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலாவிற்கு முன்பதிவு!

## சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, செப்.5-

சென்னையில் திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலா பயணத் திட்டம் 1 ல் சென்னை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்படும் பேருந்து திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயில், பெசன்ட் நகர் அஷ்ட லெஷ்மி திருக்கோயில், திருவிடந்தை நித்ய கல்யாண பெருமாள் திருக்கோயில், மாமல்லபுரம் ஸ்தல சயன பெருமாள் திருக்கோயில், சிங்கபெருமாள் கோவில், பாடலாத்ரி நரசிம்மர் திருக்கோயில், திருநீர்மலை நீர்வண்ண பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று மாலை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.



சென்னையில் திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலா பயணத் திட்டம் 2 ல் சென்னை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்படும் பேருந்து திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயில், திருநீர்மலை நீர்வண்ண பெருமாள் திருக்கோயில், திருமழிசை ஜகன்னாத பெருமாள் திருக்கோயில், திருவள்ளூர் வைத்திய வீர ராகவ பெருமாள் திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில், பூந்தமல்லி வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று மாலை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

மதுரை மாவட்டத்தில் திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலாவில் மதுரை - அழகர்கோவில் சாலையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு மதுரை 2 வளாகத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்படும் பேருந்து அழகர்கோவில் கள்ளழகர் திருக்கோயில், ஒத்தகடை ஸ்ரீ யோக நரசிம்ம பெருமாள் திருக்கோயில், திருமோகூர் காளமேக பெருமாள் திருக்கோயில், திருகோஷ்டியூர் சௌம்ய நாராயண பெருமாள் திருக்கோயில், மதுரை கூடலழகர் பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று மதுரை ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தை மாலை வந்தடையும்.

திருச்சி மாவட்டத்தில் திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலாவில் திருச்சி ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்படும் பேருந்து உறையூர் அழகிய மணவாள பெருமாள் திருக்கோயில், ஸ்ரீரங்கம் ரெங்கநாதசுவாமி திருக்கோயில், உத்தமர் கோவில் புருஷோத்தம பெருமாள் திருக்கோயில், குணசீலம் பிரசன்ன வெங்கடாசல பெருமாள் திருக்கோயில், தான்தோன்றி மலை கல்யாண வெங்கடராம பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று மாலை 5.00 மணிக்கு திருச்சி ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தை வந்தடையும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலாவில் தஞ்சாவூர் ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு புறப்படும் பேருந்து திருகண்டியூர் சாபவிமோச்சன பெருமாள் திருக்கோயில், கும்பகோணம் சாரங்கபாணி பெருமாள் திருக்கோயில், திருநாகேஸ்வரம் உப்பிலியப்பன் பெருமாள் திருக்கோயில், நாச்சியார் கோவில் சீனிவாச பெருமாள் திருக்கோயில், திருச்சேறை சாரநாத பெருமாள் திருக்கோயில், மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்கோயில், வடுவூர் கோதண்டராமர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று இரவு ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தை வந்தடையும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத்திட்டத்தின் திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலாவிற்கு சென்னை வாலாஜா சாலை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக முன்பதிவு மையத்தில் நேரடியாகவும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் முன்பதிவு நடைபெற்று வருகின்றது. திவ்யதேசம் பெருமாள் திருக்கோயில்கள் ஒரு நாள் சுற்றுலா குறித்த மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண்.180042531111 மற்றும் தொலைபேசி எண்கள் 044 25333333, 04425333444 ஆகிய எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம்.

மேற்கண்டவாறு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகி

# எம்.கார்த்தி தாயார் மாலதி மறைவு!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், செப். 6 -

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் கார்த்தி என்று அழைக்கப்படும் எம்.கார்த்திகேயனின் தாயார் மாலதி அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணியின் துணை அமைப்பாளர் கார்த்தி என்று அழைக்கப்படும் கார்த்திகேயனின் தாயார் மாலதி அவர்கள் உடல் நலக் குறைவால் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மறைந்த மாலதிக்கு கொத்தமங்கலம் திமுக கிளைக்கழக செயலாளராக உள்ள மாரிமுத்து என்கிற கணவரும், கார்த்திகேயன், மைக்கேல் ராஜ் ஆகிய மகன்களும் உள்ளனர். இதில் கார்த்தி எனும் கார்த்திகேயன் திருத்துறைப் பூண்டி ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணியின் துணை அமைப்பாளராக உள்ளார்.

மறைவின் தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா ,ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாண்டியன், ப.ஆடலரசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் தங்கள் இரங்கலை தெரிவித்தனர். அம்மையாரின் இறுதி ஊர்வலம் அவரது சொந்த ஊரான கொத்தமங்கலத்தில் 04.09.2024. அன்று நடைபெற்றது.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், சேலம்–7**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.15/2024–2025/முவஅ/நாள்: 31.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம் அவர்களால் RIDF - XXX - 2024-2025 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிகளின் கீழ் சேலம் (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 3 சாலைப்பணிகள் மற்றும் கோவை (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 2 சாலைப்பணிகள் ஆகிய பணிகளுக்கு இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.09.2024 அன்று 15.00 மணி (இணையதள கடிகாரத்தின்படி) வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **06.09.2024 முதல்** தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், சேலம்–7**

செ.ம.தொ.இ/3487/ஒப்பந்தப்புள்ளி/2024



தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத் துறை**

**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், சேலம்-7**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 14 / 2024–2025 / முவஅ / நாள் : 30.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், சேலம் அவர்களால் RIDF XXX - 2024-2025 - ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிகளின் கீழ், சேலம் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்தைச் சார்ந்த 2 சாலைப்பணிகளுக்கு இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.09.2024 அன்று 15.00 மணி** (இணையதள கடிகாரத்தின்படி) வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **06.09.2024** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின், மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், சேலம்–7**

செ.ம.தொ.இ/3488/ஒப்பந்தப்புள்ளி/2024




நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமத்தி வேலூர் கபிலர்மலை மோகனூர் மேற்கு ஆகிய ஒன்றியங்களிலும், பரமத்தி, வேலூர், வெங்கரை, பாண்டமங்கலம், பொத்தனூர் ஆகிய பேரூர்களிலும் ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சேலம் முன்னாள் மேயரும், ஆதிதிராவிடர் நல வாரிய உறுப்பினருமான ரேகா பிரியதர்ஷினி, ஒன்றிய கழகச் செயலாளர் தனராசு, சண்முகம், ஏ.பி.ஆர்.சண்முகம் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூரில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில்

# 7 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் சேவை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், செப். 6 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடைதடுப்பூசி திட்டத்தின் கீழ் 07 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவையை துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 29.8.2024 வியாழக்கிழமை அன்று கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடை தடுப்பூசி திட்டத்தின் கீழ் 07 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவையை மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்து ராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தேசிய கால்நடை தடுப்பூசி திட்டத்தின் (NADCP) கீழ் கிராம பகுதிகளில் உள்ள கால்நடைகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்களுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் முதல் கட்டமாக 200 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் சேவையை 20.08.2024 அன்று துவக்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக திருப்பூர் மாவட்டத்திற்கு முதல் கட்டமாக 07 கால்நடை மருத்துவ ஊர்திகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் மூலம் தொலைதூர கிராமங்களிலுள்ள கால்நடை மருந்தகங்கள் இல்லாத கிராம பகுதிகளுக்கும், கால்நடை மருத்துவ சேவைகளை அந்தந்த இடத்திலேயே வழங்கும் நோக்கத்துடனும் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், ஆடு மற்றும் கன்றுகளுக்கு குடல் புழு நீக்கம், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, கால்நடைகளுக்கு தடுப்பூசி ஆய்வு, சினை பிடிக்காத மாடுகளுக்கு சிகிச்சைகள் போன்றவை மேற்கொள்ளப்படும்.

நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளானது காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை குறிப்பிடப்பட்டுள்ள வழிதடங்களுக்கு சென்று கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். மேலும், அவசர காலங்களில் மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை 1962 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அழைப்புகளை ஏற்று கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படும். எனவே, இச்சேவையினை விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா.பாலசுப்பரமணியம், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ. மலர்விழி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்ட முன்னாள் பொருளாளர் ரத்தினசாமி, மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) மரு.புகழேந்தி, துணை இயக்குநர் மரு.பிரகாஷ், உதவி இயக்குநர்கள் மரு. செந்தூர் செல்வன் (திருப்பூர்), மரு.ஜெயராமன் (உடுமலைப்பேட்டை), மரு.வெங்கடேசன் (தாராபுரம்), கால்நடை மருத்துவர்கள் மரு.ஜெகநாதன், மரு.அறிவுசெல்வன், மரு. மணிவண்ணன், மரு.திவாகர், மரு.கார்த்தி, கால்நடை ஆய்வாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.


# தி.மு.க. பொறியாளர் அணி

# ஒன்றிய / நகர / பேரூர் கழக பொறியாளர் அணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு!

கழகத் தலைவரின் ஆணைப்படி, தி.மு.க. பொறியாளர் அணி ஒன்றிய / நகர / பேரூர் அளவிலான அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கான விண்ணப்பங்களை கீழ்கண்ட வழிமுறைகளின்படி மாநிலப் பொறியாளர் அணி வரவேற்கிறது.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பை நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்தப் பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.
3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கப்படும்.
4. கட்சி சாராத புதியவர்களை பொறியாளர் அணியில் இணைத்திட வேண்டும் என்ற கழகத் தலைவரின் ஆணைப்படி, பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5. பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
6. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR Code வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
7. மண்டல அளவில் விண்ணப்பதாரர்களை அழைத்து நேர்காணல் செய்து தேர்வு நடைபெறும்.
8. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியலை அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளரிடம் அளித்து அனுமதி பெற்று இறுதிப் பட்டியல் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

நமது பொறியாளர் அணி உலகெங்கும் உள்ள தமிழ்நாட்டுப் பொறியாளர்களையும், தற்போது பள்ளி, கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களையும் இணைக்கும் அறிவுப் பாலமாக செயல்பட இருப்பதால், களத்தில் இறங்கி பணியாற்றக்கூடிய சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள்.

அந்தந்த மாவட்ட அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் இந்த விதிமுறைகளின்படி நமது கழகத்தின்பாற் ஈர்ப்புள்ள புதிய பொறியாளர்களை அணுகி அவர்களை நமது அணியில் இணைக்கும் பணியினை விரைவில் செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**பொறியாளர் அணியில் இணைய** QR Code Scan **செய்யவும்.**

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர், தி.மு.க. பொறியாளர் அணி